அன்புள்ள ஃபேஸ்புக்குக்கு,

நாங்கள் ஃபேஸ்புக்கின் “அதிகாரப்பூர்வ அடையாளம்” (பொதுவாக “உண்மைப் பெயர்” என்று அறியப்படுவது) கொள்கையை[1] அது சீர்திருத்த வேண்டும் என்பதற்காக எழுதுகிறோம். இணை வெளிப்பாடு மற்றும் தொடர்புக்கான ஒரு மைய தளமாக ஃபேஸ்புக்கைப் பயன்படுத்துகிற மற்றும் சார்ந்திருக்கிற அனைவரையும் ஃபேஸ்புக் சமமாக நடத்துவதற்கு மற்றும் பாதுகாப்பு அளிப்பதற்கான நேரமாகும்.

நாங்கள் பெண்கள், பூர்விக மற்றும் இன சிறுபான்மை சமூகத்தினர்,LGBTQ மக்கள், மற்றும் ஃபேஸ்புக்கின் பெயர் கொள்கைகள் கலாச்சார ரீதியாக ஒரு தலைபட்சமாக மற்றும் தொழில்நுட்ப ரீதியாக பிழையானது என்பதை அறிந்த இணைய பயனர்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் பணியாற்றும் மக்கள் மற்றம் நிறுவனங்களின் கூட்டணி ஆவோம். நாங்கள் பிரதிநிதித்துவதப்படுத்துவது:

- திருநங்கை மற்றும் பாலின மாறுபாடுள்ள மக்களின் சட்டப்பூர்வப் பெயர்கள் அவர்களின் பாலின் அடையாளத்துக்கு ஏற்ப இருக்காது.
- உடல் ரீதியான வன்முறை, அடக்குமுறையான அரசாங்கத்திடமிருந்து சட்டப்பூர்மான அச்சுறுத்தல்கள், அல்லது பாலியல் சார்பு, மதம் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் அடிப்படையிலான துன்புறுத்தல்களில் இருந்து அவர்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பொய் பெயர்கள், பெயர் மாற்றத்தைப் பயன்படுத்தும் மக்களை.
- ஃபேஸ்புக்கின் “ போலிப் பெயர்” புகார் தெரிவிக்கும் தேர்வினை தவறாகப் பயன்படுத்தும் தாக்குதல்காரர்களால் அமைதியாக்கப்பட்ட மக்களை.
- ஃபேஸ்புக்கினால் உருவாக்கப்பட்ட “உண்மைப் பெயர்களுக்கான” தன்னிச்சையானத் தரங்களுக்கு பொருந்தாத சட்டப்பூர்வமான பெயர்களைக் கொண்ட மக்களை. [2]

இந்தக் கொள்கைகளின் சீர்திருத்தத்திற்கான பொறுப்புகள் இருந்த போதிலும், [3] Facebook ஃபேஸ்புக் உலகின் அனைத்து பாகங்களிலும் இருக்கும் பயனர்களின் சூழல்களை மதிக்காத ஒரு அமைப்பினைப் பராமரிக்கிறது, அதன் பயனர்களை அபாயத்திற்கு வெளிப்படுத்துகிறது, அதன் பயனர்களின் அடையாளங்களை மதிப்பதில்லை, மற்றும், பேச்சு சுதந்திரத்தைக் குறைக்கிறது.

தவறானப் பயன்பாட்டுக்கான புகார்கள் பாதிக்கப்படும் பயனர்களை அமைதியாக்கிவிடுகிறது
தற்போதைய ஃபேஸ்புக் கொள்கைகளின் கீழ், “உண்மை வாழ்க்கையில்” தாங்கள் பயன்படுத்தும் பெயர்களைக் கொண்டு, பயனர்கள் தங்களின் சுயவிவரங்களை உருவாக்குகிறார்கள்.[4] ஒரு பயனர் தனது முதல்

---

[1] “ஃபேஸ்புக்கில் என்ன வெயர்கள் அனமதிக்கப்படும்?” https://www.facebook.com/help/112146705538576
[2] நிகழ்வு உதாரணங்களுக்கு பிற்சேர்க்கையைப் பார்க்கவும்.
[3] கிரிஸ் காக்ஸின் பதிவு, அக். *1, 2014* ஃபேஸ்புக் , https://www.facebook.com/chris.cox/posts/10101301777354543.
[4] இந்த கொள்கை "அதிகாரப்பூர்வ" பெயர் கொள்கை என்றும் குறிக்கப்படுகிறது. "பேஸ்புக் என்ன பெயர்களை அனுமதிக்கிறது?" அக்டோபர் 2014 ("அனைவரும் தங்களின் உண்மை பெயர்களை அளிப்பது எங்களுக்கு தேவைப்படுகிறது...") உடன் ஜூலை 2015-ஐ ("பேஸ்புக் என்பது ஒரு சமுதாயம் அங்கே மக்கள் தங்களின்

சுயவிவரத்தை உருவாக்கும்போது, ஃபேஸ்புக்கிற்கு அடையாளச் சான்று தேவையில்லை.

சக பயனர் இந்தக் கொள்கையை மீறுகிறார் என்று எந்த வொரு ஃபேஸ்புக் பயனரும் எளிதாக ஃபேஸ்புக்கில் புகார் தெரிவிக்கலாம், மற்றும் தங்களின் கோருதலுக்கு ஆதரவளிக்கும் எந்தவொரு ஆதாரத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய கடப்பாடுமில்லை. sஎந்தவொரு பயனரும் தாங்கள் விரும்பும் அளவுக்கு புகார்களை , தாங்கள் விரும்புகிற அளவு விரைவாக, செய்யலாம், இது அவர்களை புகார் இலக்காக்கப்பட்ட அறிக்கை ஆராவாரங்களை செய்ய வைக்கிறது. இது கொள்கையின் நியாயமற்ற பயன்பாட்டுக்கு வழி வகுக்கிறது, மற்றும் ஒரு அபாயகரமான மற்றும் ஆற்றல் மிக்க ஆயுதத்தை எங்களைப் போன்ற சமுதாயங்களுக்கு ஊறு விளைவிக்க விரும்பும் நபர்களுக்கு வழங்குகிறது. ஒரு தவறான பயன்படுத்துதல் புகார் ஒரு பயனரை காலவரையின்றி மௌனமாக்கி விடுகிறது.

உலகளாவிய LGBTQ சமுதாயம் [5], தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா [6] மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள ஃபேஸ்புக் பயனர்கள் “தவறாகப் பயன்படுத்தலைப் புகார்தெரிவித்தலுக்கான” பொத்தானைப் பயன்படுத்தி தங்களின் இலக்குகளை மௌனமாக்குவதற்காக (சில சமயங்கள் ஃபேஸ்புக் மூலமாக ஒத்துழைப்பதன் மூலம்) வேண்டுமென்றே குழுக்கள் ஏற்படுத்தப்படுகின்றன.[7]

**“அசல் வாழ்க்கையில் இருக்கும் பெயர்” ஒரு அடையாளம் அல்ல**

தவறானப் பயன்படுத்தலுக்கான ஒரு புகாரை எதிர்கொள்ளும்போது (புகாரின் தகுதியைக் கருத்தில்கொள்ளாமல்), தங்கள் கணக்கைப் பராமரிக்க விரும்பும் பயனர்கள் தங்களின் அடையாளச் சான்றினை சமர்ப்பிக்க வேண்டும். சுயவிவரத்தின் பெயர்கள் சட்டப்பூர்வ பெயர்களுக்குப் பொருந்தவேண்டாம்

---

அதிகாரப்பூர்வ பெயர்களை பயன்படுத்துகிறார்கள்") ஒப்பிடவும்.
அமைந்திருப்பது:https://web.archive.org/web/20141001193811/https://www.facebook.com/help/112146705538576; https://www.facebook.com/help/112146705538576.

[5] பார்க்கவும், எ.கா., ஜே பார்மன், டிராக் குயின்ஸ், பிற செயல்பட்டாளர்கள் தங்களின் உண்மை பெயர்களை பயன்படுத்த பேஸ்புக் வற்புறுத்தியதால் சீற்றம் அடைந்தார்கள் எஸ்பிஸ்ட், செப். *11, 2014,* http://sfist.com/2014/09/11/drag_queens_other_performers_outrag.php; செலினா லார்சன், பேஸ்புக்கின் உண்மை பெயர் கொள்கை கோருகிறது எத்தியோபியா LGBT ஆர்வலர்கள், தி டெய்லி டாட், ஜூலை 12, 2015 http://www.dailydot.com/technology/facebook-real-name-policy-ethiopian-lgbt-activist/

[6] ரஸ்ஸல் பிராண்டம், பேஸ்புக்கின் ரிபோர்ட் ஆப்யூஸ் பட்டன் ஒரு உலகளாவிய ஒடுக்குமுறைக்கான கருவியாக ஆகிவிட்டது, தி வெர்ஜ், செப். 2, 2014 http://www.theverge.com/2014/9/2/6083647/facebook-s-report-abuse-button-has-become-a-tool-of-global-oppression

[7] சுப்ரா நோட் 3;
சபீர் ஹபீப் காஸி, "நாங்கள் உங்களை தடுப்போம்": நட்பு தேவதைகளாக வலம் வரும் பொது எவ்வாறு இந்திய பெண்கள் பேஸ்புக்கில் உயிருக்கு அச்சுறுத்தல்களை சந்திக்கிறார்கள், குலோபல் வாய்ஸ், ஆகஸ்ட் 6, 2015.. http://advocacy.globalvoicesonline.org/2015/08/06/we-will-choke-you-how-indian-women-face-fatal-threats-on-facebook-while-trolls-roam-free/; பிரீதா ஜி., 13 ஆகஸ்ட் 2015 அன்றைய பதிவு , https://www.facebook.com/preetha.gp/posts/862310883838735?fref=nf;
குடும்ப வன்முறை அல்லது பாலியன் வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தான பயனர் கதைகள், (கடைசியாக புதுப்பிக்கப்பட்டது, மே *29, 2015)* மை நேம் இஸ் கேம்பெயின், , http://www.mynameiscampaign.org/category/user-stories/survivor/.

என்பதை ஒப்புக்கொள்கிறது, மற்றும்  அரசாங்கம் வழங்கிய  அடையாளம் அவசியம் இல்லை என்று என்று வலியுறுத்தியுள்ளது. இதுவரையிலும் " "தவறான பயன்படுத்தலுக்காக" ஃபேஸ்புக் கேட்கும் அடையாளங்கள், அது அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக இருந்தாலும் சரி, தனியார் நிறுவனத்தால் வழங்கப்பட்டதாக இருந்தாலும் சரி, ஒரு நபரின் புனைப் பெயர் அல்லது "உண்மைப் பெயரை" முன்னிலைப்படுத்த வேண்டும் என்று அவசியம் இல்லை குறிப்பாக திருநங்கைள் மற்றும் ஊறுகளில் இருந்து தங்களைக் காத்துக்கொள்ள நினைக்கும் பிற நபர்கள். ஒரு தனியார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட ஒரு அடையாளச் சான்றும் பெரும்பாலும் தனிப்பட்ட நபரின் சட்டப்பூர்வ அடையாளம் மற்றம் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள எண்ணுடன் தொடர்புப் படுத்தப்படும் .[8]

இந்த செயல்முறையானது பாதுகாப்பு அல்லது அந்தரங்க நோக்கங்களுக்காக சட்டப்பூர்வ பெயரைத் தவிர பிற பெயர்களைப் பயன்படுத்துபவர்களை உண்மையில்  ஆபத்தில்   வைக்கிறது.  ஃபேஸ்புக் கொள்கைகளுக்கு ஏற்ப அரசாங்கம் வழங்கிய அடையாளச் சான்றுகளை சமர்பித்த சட்டப்பூர்வ பெயர்களுடன்  கூடிய கணக்குகளை மீண்டும் செயல்படுத்திய சில நிகழ்வுகளில், அவர்கள் முன்னாள் துணைகளாலும், அரசியல் ரீதியான நோக்கமுள்ள தாக்குதல்கள், மற்றும் உண்மை வாழ்க்கை வன்முறைகளுக்கான அச்சுறுத்தல்களுக்கு வெளிப்படுத்தியது[9]

ஃபேஸ்புக்கின் அமலாக்க செயல்முறை பயனர்களுக்கு ஒரு நிவாரணம் இல்லாமல் விட்டுவிடுகிறது

பல ஆண்டுகளாக,சேவைகள் முழுவதிலும் தங்களின்  முறையீட்டு செயல்முறைகளில் பல குறைபாடுகளைக் கொண்டிருப்பதை ஃபேஸ்புக் அறியும், அவை இன்னும் சரி செய்யப்படவில்லை. .[10] ஃபேஸ்புக் ஏற்கிற ஒரு வகையான அடையாளச் சான்ற இல்லாத தனிநபர்கள் எந்த உதவியும் செய்யப்படாமல் அப்படியே கைவிடப்படுகிறார்கள். அறிவிக்கைப் பெற்று பத்து நாட்களுக்குள் ஃபேஸ்புக்கிற்கு அடையாள சான்றுகளை சமர்பிக்க வேண்டும், இது  தினசரி இணைய அணுகல் இல்லாதவர்களுக்கு சாதகமானதல்ல, பலரும் குறைந்த இணை ஊடுருவல் உள்ள வட்டாரங்களில் வாழ்கிறார்கள். குறித்த காலத்தில் அடையாளச் சான்றுகளை சமர்ப்பிக்க தவறுபவர்களின் கணக்குகள் பூட்டப்படுகின்றன, அவர்களால் மற்ற பயனர்களோடு தொடர்புகொள்வதும் தங்களின் தரவுகளை வேறு இடத்துக்கு தரவிறக்கம் செய்வதும் தடுக்கப்படுகிறது. விலக்கப்பட்ட பயனர்களுக்க தங்களின் கணக்கிற்கான அணுகலுக்காக மேல்முறையீடு செய்வதற்கான உரிமை வழங்கப்படவில்லை.

---

[8] பல நாடுகள் சிறப்பான தனிப்பட்ட அடையாள எண்களைப் பயன்படுத்துகிறார்கள் (யுஎஸ்ஸில் சமூக பாதுகாப்பு எண் போன்றது) எல்லா ஆவங்கள் மீதும், மாணவர் அடையாள அட்டை மற்றும் நூலக அட்டைகள் போன்று, FB வழங்குகிற "நான்-ஸ்டேட்" உதாரணங்கள் பலவற்றை உள்ளிட்டு.
[9] சமந்தா ஆலன், குடும்ப வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு பேஸ்புக் வெளிக்காட்டுகிறது, தி டெய்லி பீஸ்ட், மே 20, 2015 , http://www.thedailybeast.com/articles/2015/05/20/how-facebook-exposes-domestic-violence-survivors.html.
[10] லீ ரோலாண்ட், ஆடையற்ற சிலை ஒன்றை வெளிப்படுத்துகிறது: பேஸ்புக் சென்ஸார்ஷிப்புக்கு மேலான மேல்முறையீடு செயல்முறை தேவை, ஏசிஎல்யு ப்ரீ ஃப்யூச்சர் பிளாக், செப். 25, 2013, https://www.aclu.org/blog/naked-statue-reveals-one-thing-facebook-censorship-needs-better-appeals-process.

## அடையாளச் சான்று  செயல்முறை பயனர்களின் தரவுகளுக்கு ஆபத்து விளைவிக்கிறது

தங்களின் அடையாளத் தகவல்களை அனுப்புவதற்கு தேர்ந்தெடுக்கும் பயனர்களுக்கு அவர்கள் தகவல்கள் பாதுகாப்பாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது, ஆனால் எவ்வாறு அவர்களின் தரவுகளை ஃபேஸ்புக் நடத்துகிறது என்பது பற்றிய தகவல்கள் ஏதுமில்லை. மறைகுறியாக்கப்படாத மின்னஞ்சல்கள் மூலமாக தங்களின் அடையாள ஆவணங்களை அடிக்கடி ஃபேஸ்புக்கிற்கு அனுப்புகிறார்கள் -  குறிப்பாக தாங்கள்  செய்யும் அரசியல்வேலைகளுகாக கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும் பயனர்களின் கவலைகள் தொடர்பாக.

## இந்த கொள்கை சட்டப்பூர்வ கவலைகளை எழுப்புகிறது

சர்வதேச மனித உரிமைகள் தரங்களின் கீழ், மனித உரிமைகளை மதிப்பதற்கும் அவர்கள் உண்டாக்குகிற அல்லது பங்களிக்கிற ஏதேனும் தவறானப் பயன்படுத்துதல்களுக்காக  நிவாரணம் வழங்குவதற்கும் நிறுவனங்களுக்குப் பொறுப்பு உண்டு. [11]  வேறுபடுத்திப் பார்க்கம் வகையில் உள்ள பயனர்களை விலக்கும் கொள்கை   ஐரோப்பிய யூனியனின் நெறிமுறைகளை [12] மற்றும் யுஎஸ் சிவில் உரிமைகளுக்கான சட்டங்களின் உரிமைகளுக்கான உணர்வை மீறுகிறது.[13] இந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஃபேஸ்புக் பராமரிக்குமானால், அது பெண்கள் மற்றும் சிறுமிகள், LGBTQ மக்கள், மற்றும் பலருருக்கு ஒரு ஆபத்தான இடமாக ஒரு மதிப்பினை உருவாக்கும். மிகவும் கண்டிப்பான தரவு பாதுகாப்பு தேவைகள் உள்ள நாடுகளை ஏமாற்றுவதாகவும் அது  தொடர்ந்து நடைபெறும்.  உலகின் அனைத்து பாகங்களிலும் உள்ள தனது தற்போதைய மற்றும் எதிர்கால பயனர்கள் எந்தவித வேறுபாடுமின்றி சரியானதை  செய்ய வேண்டும் என்று விரும்பினால், தனது பயனர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு முயல வேண்டும்.

## முன்மொழியப்பட்ட கொள்கை மாற்றங்கள்

ஒரு கூட்டணியாக, தனது கொள்கை மற்றும் செயல்முறையில் பின்வரும் மாற்றங்களை செய்வதன் மூலம் அனைத்து பயனர்களின் மதிப்பு, பாதுகாப்பு

[11] மனித உரிமைகள் பிரச்சனைகள் மற்றும் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பு  மற்றும் பிற தொழில் முனைவுகளுக்கான பொது செயலாளரின் சிறப்பு பிரதிநிதி, தொழில் மற்றும் மனித உரிமைகள் மீதான வழிகாட்டுதல் கொள்கைகள்: "பாதுகாக்கவும், மதிக்கவும் மற்றும் நிவாரணம்" என்கிற ஐக்கிய நாடுகளின் வரைசட்டத்தை செயல்படுத்தல். மார். 21, 2011, ஐ.நா. ஆவணம், A/HRC/17/13http://www.ohchr.org/Documents/Publications/GuidingPrinciplesBusinessHR_EN.pdf (அணுகப்பட்டது 2, செப்டெம்பர் 2015]. தனியார் இணைய தளங்களை உள்ளிட்டு இணைய மனித உரிமைகளை அங்கீகரிப்பதை பெயரில்லாமை இயலச் செய்கிறது என்கிற வளர்ந்துவரும் ஒரு அங்கீகாரம் இருக்கிறது. பார்க்க, கருத்து சுதந்திரம் மற்றும் வெளிபடுத்தலுக்கான சுதந்திரத்தின்  உரிமையை மேம்படுத்துவதற்கு பாதுகாப்பதற்கான சிறப்பு நிருபரின் அறிக்கை,, ஐ.நா. மனித உரிமைகள் குழு,   டேவிட்  கே, 16, 20, 22   மே 2015, ஐ.நா. ஆவணம் A/HRC/29/32, கிடைக்கப்பெறுவது: http://www.ohchr.org/EN/HRBodies/HRC/RegularSessions/Session29/Documents/A.HRC.29.32_AEV.doc [accessed 2 September 2015].

[12]ஜெர்மன் சட்டப்படி புனைப்பெயர்களை வைத்துக்கொள்வதற்கு ஜெர்மன் பயனர்களை பேஸ்புக் அனுமதிக்க வேண்டும் என்று ஹாம்பர்க் தரவு பாதுகாப்பு ஆணையம் உத்தரவிட்டுள்ளது (ஜூலியா  பியோரெட்டி, ஜெர்மன் ஒழுங்குபடுத்துனர் பேஸ்புக் புனைபெயர்களை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார், ராயிட்டர்ஸ், ஜூலை 28, 2015, http://www.reuters.com/article/2015/07/28/us-facebook-germany-pseudonyms-idUSKCN0Q21U620150728). நாடியா கய்யாலி, பேஸ்புக்கின் வினவத்தக்க சேவை விதிகளை ஐரோப்பிய தரவு பாதுகாப்பு ஆணையங்கள் தீவிரமாக எடுத்து கொள்கின்றன, *EEF,* பிப். *26, 2015*-ஐயும் பார்க்கவும் .https://www.eff.org/deeplinks/2015/02/new-report-shows-european-data-protection-authorities-are-taking-facebooks

[13]பார்க்க, எ.கா. கால். சிவில் குறியீடு *51* எட் சீக்

மற்றும் உணர்வுவெளிப்படுத்தல் உரிமைகளுக்கு ஆதரவளிப்பதற்கான அதன் வாக்குறுதியை ஃபேஸ்புக் நிறைவேற்ற வேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்:

- புனைப்பெயர்கள் மற்றும் சட்டப்பூர்வமல்லாத பெயர்களை வைத்துக்கொள்வதற்கு அதன் தளத்தில்  இயல்பாக அனுமதிப்பதற்கான பொறுப்பினைக கொள்ளுதல்

- ஒரு இடைக்கால நடவடிக்கையாக ஒரு உண்மைப் பெயருக்கான கொள்கை இருக்கம் வரை:
    - தங்கள்  கோருதல்களுக்கு அதரவளிப்பதற்காக ஒரு பயனர் தனது சட்டப்பூர்வ அடையாளத்தை  வெளியிடுதவதற்கான காரணத்தை வலியுறுத்துவதற்கான காரணங்களுடன் பயனர்கள்  தவறாகப் பயன்படுத்துதலுக்கான  அசல் பெயர் புகார்   படிவங்களை நிரப்ப வேண்டும்;
    - தங்களின் அரசாங்க அடையாளச் சான்றினைத் சமர்ப்பிக்காமல் தங்களின்  அடையாளங்களை பயனர்கள் உறுதி செய்வதற்கான ஒரு இணக்க செயல்முறையை உருவாக்க வேண்டும்.
    - தொழில்நுட்ப விவரங்

    - அடையாளத் தகவல்கள் எங்கே  மற்றும் எவ்வாறு சேமிக்கப்படுகின்றன, அவை எவ்வாறு சேமிக்கப்படுகின்றன, அவற்றை எவ்வளவு காலத்திற்கு யாரெல்லாம் அணுகலாம் என்பது போன்ற தொழில்நுட்ப விவரங்கள் மற்றும் ஆவணங்களை அவற்றை சமர்ப்பிப்பதற்கான  செயல்முறையின் போது பயனர்களுக்குத் தர வேண்டும்.
    - மறைகுறியாக்கப்பட்டத்  தொடர்புக்கான PGP அல்லது மற்றொரு பொதுப் படிவத்தினைப் பயன்படுத்தி அடையாளப்படுத்தும் தகவல்களை பயனர்கள் சமர்ப்பிப்பதற்கான திறனை பயனர்களுக்கு வழங்க வேண்டும், அதனால் அவர்கள் சமர்ப்பிக்கும் செயல்முறையின்போது தங்களின் அடையாள தகவல்களைப் பாதுகாத்துக்கொள்ளலாம். .

- கணக்குகளை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதற்கான எந்த வொ ரு முடிவுக்காகவும்  போதுமானக் காரணங்களைத் தரவும், தங்களின் கணக்குகளில் பூட்டப்பட்ட பயனர்களுக்கான வலுவான மேல்முறையீட்டுக்கான   செயல்முறையை வழங்கவும், உதாரணமாக, வெவ்வேறு வகையான ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்காக, ஒரு உண்மையான ஃ பேஸ்புக் ஊழியரிடம்பேசுவதற்கு, குறிப்பாக பாதுகாப்பை ஈடுபடுத்தும் நிகழ்வுகளில், ஒரு இரண்டாம் மறுஆய்வு கோருவதற்கான ஒரு உரிமை,  .

ஃபேஸ்புக் அதன் பெயர் கொள்கையில் உறுதியான அர்த்தமுள்ள மாற்றங்களை உருவாக்குவதற்காக ஃ பேஸ்புக் உடன் பணியாற்ற நாங்கள் எதிர்பார்க்கிறோம் மற்றும்  அனைத்து ஃபேஸ்புக் பயனர்களுக்கும்  அவர்களின் உரிமைகள் மற்றும்

பேச்சு சுதந்திரத்தை உறுதி செய்வதற்கான இந்தக்கொள்கைகளை வலுவாக்குவதில் பங்கேற்பாதற்கான ஒரு வாய்ப்பினை நாங்கள் வரவேற்கிறோம். இந்த கொள்கையின் சிதைக்கப்பட்ட ஒருவருக்கொருவருடன் பேசிக்கொள்வதற்கான அவர்களின் திறனைக் கொண்ட சமுதாயங்களை நாங்களும் கையாள்கிறோம். அதனால் தான் இந்த முன்மொழியப்பட்ட மாற்றங்களுக்கு அக்டோபர் **31** க்குள் பதில் தருமாறு ஃபேஸ்புக்கை நாங்கள் கேட்கிறோம். இந்தக் கொள்கைத் தற்போது விளைவிக்கிற பொதுவான காயத்தை எங்கள் சமுதாயங்கள் அடையாளம் கண்டுள்ளன மற்றும் அடிப்படை மாற்றங்கள் செய்யப்படும் வரை வாதாடுவதை நாங்கள் நிறுத்த மாட்டோம்.

கையொப்பமிடப்பட்டது